முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்

முன்னிலை: திரு. இரா.வேலரஸ், B.Sc.,B.L., LL.M.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, சேலம்.
2025–ம் ஆண்டு ஜூலை மாதம் 31ம் நாள் வியாழக்கிழமை

இடைநிலை மனு எண். 06/2024
in
அசல் வழக்கு எண். 143/2021

ஆர்.சுப்பிரமணியம் ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

ஏ.செந்தில்குமார் .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 07.07.2025ம் தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ஏ.ஞானசீலன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.இனியன் செந்தில் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

உத்தரவு

மனுதாரர்/வாதி இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள காரணங்களுக்காக பதில் எதிருரையை (Reply Statement) தாக்கல் செய்ய அனுமதி அளிக்க கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:–

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரியும் மாற்று பரிகாரமாக பணப்

பரிகாரம் கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஒருதலைபட்ச தீர்ப்புக்கு பிறகு காலதாமதம் மனுவுடன் தீர்ப்பை ரத்து செய்வதற்கு பதில் உரையுடன் மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்த காலதாமத மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி தள்ளுபடி உத்தரவை எதிர்த்து எதிர்மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீடு நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டு வழக்கு மீண்டும் விசாரணைக்கு ஏற்று கொள்ளப்பட்டது. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதிலுரை வாதியை ஏமாற்றும் நோக்கத்துடன் முழுக்க முழுக்க பொய்யான தகவலுடன் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிலுரைக்கு மனுதாரர்/வாதி தரப்பில் பதில் எதிருரை (Reply Statement) தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. மனு அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டு விடும். எனவே மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் கூறப்பட்ட சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு</u>:–

மனு சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைநிற்கத்தக்கது அல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர்/ வாதியின் 3 வது அபிடவிட்டில் ஏதோ எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதிலுரை வாதியை ஏமாற்றும் நோக்கத்துடன் முழுக்க முழுக்க பொய்யான தகவலுடன் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஏதோ மேற்படி பதிலுரைக்கு மனுதாரர் தரப்பில் பதில் எதிருரை (Reply Statement) தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளதாகவும் தெரிவித்துள்ள

சங்கதிகள் உண்மைக்கு புறம்பான சங்கதிகள் ஆகும். உண்மையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிருரையை இந்த பதிலுரையின் ஒரு அங்கமாக பாவித்து கொள்ள வேண்டும். மேலும் மேற்படி வழக்கில் ஒரு தலைபட்ச உத்திரவு இரத்து செய்ய மனுவுடன் கடந்த 19.07.2022ம் தேதி பிரதிவாதி அசல் வழக்கில் எதிருரையை தாக்கல் செய்துள்ளார். அன்றைய தினத்திலேயே மனுதாரர்/வாதி தரப்பில் ஒரு நகல் வழங்கப்பட்டது. அதன் பின்னிட்டு ஒரு தலைபட்ச உத்தரவு இரத்து செய்யும் மனுவில் மனுதாரர் பதிலுரை தாக்கல் செய்துள்ளார். அந்த பதிலுரையில் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையை எவ்வித ஆட்சேபனை செய்யாமலும், மேலும் ஒருதலைபட்ச உத்தரவு இரத்து செய்யும் மனுவில் வாதி தாக்கல் செய்த அந்த பதிலுரையில் எவ்வித ஆட்சேபனையும் செய்யாமல் இருந்து விட்டு தற்போது மனுதாரர்/வாதி புதிய சங்கதிகளை ஜோடித்து தவறான சங்கதிகளை எதிர் பதிலுரையில் கூறி கெட்ட எண்ணத்துடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 19.02.2023ம் தேதி ஒருதலைபட்ச உத்தரவு நிபந்தனையுடன் இரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சங்கதிகள் தெரியும். மேலும் எதிர்மனுதாரர் கடந்த 2024ம் வருடம் பிப்ரவரி மாதம் சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுபடி பிரதிவாதி ரூ.50,000/- இந்நீதிமன்றம் வைப்பீடு செய்யப்பட்ட சங்கதிகள் மனுதாரருக்கு நன்கு தெரியும். மேலும் இந்நீதிமன்றம் கடந்த 19.02.2024ம் தேதி அன்று வாய்தா கொடுக்கப்பட்டு அன்றைய தினத்தில் மேற்படி ஒருதலைபட்ச உத்தரவு இரத்து செய்யப்பட்டு, பின்னிட்டு அசல் வழக்கில் எழுவினா வணையப்பட்டு 03.10.2024ம் தேதியன்று விசாரணைக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் மனுதாரர் வேண்டுமென்றே கெட்ட

எண்ணத்துடன் வழக்கை கால தாமதப்படுத்த வேண்டும் என்பதற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர் காலம் கடந்து தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கது அல்ல. எதிர் பதிலுரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது மற்றும் தவறானவை என்பதால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரருக்கு செலவு தொகையோடு சேர்த்து தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:–</u>

6. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

7. தீர்வு:–

மனுதாரர்/வாதி தரப்பில் பதில் எதிருரையை (Reply Statement) தாக்கல் செய்ய அனுமதி அளிக்க கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9 ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. இந்த அசல் வழக்கானது வாதியால் பிரதிவாதிக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரியும், மாற்றுப் பரிகாரமாக பணப் பரிகாரம் கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டு இருந்ததில் மேற்படி வழக்கில் ஆஜரான எதிர்மனுதாரர்/பிரதிவாதி அவரது பதிலுரையில் மனுதாரர்/வாதியிடம் ரூபாய் முப்பது இலட்சம் கடன் பெற்றுக்கொண்டதற்கு ஆதாரமாகத் தான் கிரய ஒப்பந்தப் பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி தொகையும் வட்டியுடன் திருப்பி செலுத்தப்பட்டது என்றும், வழக்கு சொத்தை விற்பனை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு கிரய ஒப்பந்தப்பத்திரம் எழுதி

கொடுக்கவில்லை என்றும், மேற்படி ஒப்பந்த பத்திரத்தின்படி முன்பணம் ரூ.30,00,000/– மனுதாரர்/வாதியிடமிருந்து எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் பெற்று கொள்ளப்படவில்லை என்றும், வழக்கு சொத்தின் மதிப்பு ரூ.35,00,000/–த்திற்கு மேற்பட்டது என்றும் பிரதிவாதி சங்கதிகளை தெரிவித்திருந்த காரணத்தினால் மேற்படி சங்கதிகளை மறுத்து மனுதாரர்/வாதி பதிலுரை தாக்கல் செய்வதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/வாதி தனது பதிலுரையில் ஏற்கனவே எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் அவரது பதிலுரையில் தெரிவித்துள்ள சங்கதிகளை சட்டப்படி மறுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்ற காரணத்தினால் மேற்படி மனுவை அனுமதிக்க வேண்டியது நீதிக்கு உகந்ததாக உள்ளது.

9. இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, இரு தரப்பிலும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் முன்னிடுவதற்கு தகுந்த வாய்ப்பு அளிக்கப்பட்ட பிறகு தான் வாதியால் அவரது வழக்கு பிராது மற்றும் பதிலுரைக்கான எதிருரையில் தெரிவித்துள்ள சங்கதிகள் உண்மையானதா? அல்லது பிரதிவாதியால் அவரது பதிலுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையானதா? என்பதை முடிவு செய்ய இயலும். வழக்கின் தற்போதைய சூழ்நிலையில் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய இயலாது என்ற சூழ்நிலையில் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு செலவு தொகை எதுவுமின்றி அனுமதித்து உத்தரவிடுவதே நீதிக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10. முடிவில், மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் சரி பார்க்கப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/– இரா.வேலரஸ்)
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: – இல்லை

(ஒம்/– இரா.வேலரஸ்)
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.